செ.வெ.எண்: 409/2016 நாள்: 29.06.2016

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகள்/விவசாயிகள் குழுக்களுக்கு இலவசமாக சமுதாய குளங்கள் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. புதிதாக அல்லது கூடுதலாக 10 ஹெக்டேர் வரை பாசனவசதி பெறும் மலைப்பாங்கான பகுதிகளில் சமுதாய குளங்கள் அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம் செலவிலும், சமவெளிப்பகுதிகளில் ரூ.20.00 இலட்சம் செலவிலும் சமுதாய குளங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். பாசன வசதி பெறும் பரப்பு குறைவாக இருந்தால் பரப்பினையும் தொகையினையும் கணக்கிட்டு அத்தொகைக்குள் இலவசமாக சமுதாய குளங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் பயன் பெறவிரும்பும் விவசாயிகள்/விவசாய குழுக்கள் கீழ்கண்ட முகவரியில் செயல்படும் அலுவலகத்தினை உடன் தொடர்பு கொண்டு விண்ணப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.


செயற் பொறியாளர்,<br>
வேளாண்மைப் பொறியியல் துறை,<br>
833, தொழிற்பேட்டை, கோணம்,<br>
நாகர்கோவில் - 629004.<br>
தொலைபேசி எண்: 04652 - 260681.<br>
கைபேசி எண்: 9443282114.


| செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) நாகர்கோவில். | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். (வேளாண்மை) | மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி. |
|---|---|---|

---


வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.